(7) அரசினர் தனித் தீர்மானம்

திருவேற்காடு நகரியம் அமைத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி, செங்கற்பட்டு மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சியிலே, ஒன்றியத்திலே திருவேற்காடு, வீரராகவபுரம், சுந்தரசோழவரம் ஊராட்சிகள் மற்றும் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோலடி, அயனம்பாக்கம், நூம்பல் ஊராட்சிகள், அடையாளம் பட்டு ஊராட்சியிலுள்ள பெருமாளகரம், வருவாய் கிராமம் ஆகியவை அடங்கிய நிறுவனக் காலனியாக இருக்கிற பகுதியை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(8) வரவு-செலவுத் திட்டம், 1979–80, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

(ஆ) கோரிக்கை எண் 11. மாவட்ட நிர்வாகம்.—தொடர்ச்சி,

*திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் இந்த மானியங்களைக் குறித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் மாவட்ட நிர்வாகத்தை முதலில் நான் எடுத்துக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் தொகுதிகளிலே பணியாற்றுகிறபோது ஏற்படுகிற பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, அபிவிருத்தி வேலைகளை ஏற்பாடு செய்வதற்கு வாய்ப்பு தரக்கூடிய ஒரு அமைப்பாக மாவட்ட அபிவிருத்தி மன்றம் இருக்கிறது. இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றம் எப்படிச் செயல்படுகிறது என்று சொன்னால், அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு